Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-1**

Name : அமலதாஸ்
Father / Husband name : குப்பன்
Village : கூச்சிக்கொளத்தூர்
Age : 57
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

Accused present. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். இந்த வழக்கின் விபத்தில் இறந்துபோன குப்பன் எனது அப்பா. சாட்சிகள் ஆரோக்கியடென்னிஸ், அருள் ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சிகள் ஆரோக்கியராஜின் மகன் அருள், மரியஜோசப் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 29.06.2023 அன்று காலை 6 மணியளவில் எனது அப்பா திண்டிவனம் செல்வதற்காக நடந்து சென்றபோது சென்னையிலிருந்து திண்டிவனம் நோக்கி வந்த TN 19 9965 என்ற பைக் வேகமாக வந்து அப்பாவின் மோதி அப்பாவிற்கு கை, கால்கள் உடைந்துவிட்டது. மேற்படி சம்பவத்தை அருள், ஆரோக்கியடென்னிஸ் ஆகியோர்கள் பார்த்து என்னிடம் தகவல் சொன்னார்கள். தகவல் அறிந்த நான் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் மருத்துவரிடம் விசாரித்தபோது அப்பா இறந்துவிட்டதாக சொன்னார். பின்னர் ஒலக்கூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். போலிசார் சம்பவயிடத்தை வந்து பார்த்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கைரேகை என்னுடையது தான். **சாட்சியின் கைரேகையுடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உடலை போஸ்ட் மார்டம் செய்து கொடுத்தார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-2**

Name : ஆரோக்கியடென்னிஸ்
Father / Husband name : மரியஜோசப்
Village : கூச்சிக்கொளத்தூர்
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

Accused present. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது கார்பென்ட்டிங் வேலை செய்கிறேன். இந்த வழக்கின் விபத்தில் இறந்துபோன குப்பன் எனது ஊரை சேர்ந்தவர். அ.சா.1 எனது மாமா முறை ஆவார். சாட்சிகள் அருள், ஆரோக்கியராஜின் மகன் அருள் என்பவரை எனக்கு தெரியாது. சாட்சி மரியஜோசப் எனது அப்பா. கடந்த 29.06.2023 அன்று காலை சுமார் 06.15 மணியளவில் எங்கள் ஊரிலுள்ள பஸ்டாப் அருகிலுள்ள டீக்கடைக்கு நானும் அருள் என்பவரும் சென்றோம். அப்போது சென்னையிலிருந்து TN 19 9965 FZ Yamaha இருச்சக்கர வாகனம் வேகமாக வந்தது. அப்போது குப்பன் எங்கள் ஊரிலிருந்து திண்டிவனம் செல்வதற்காக ரோட்டை கடந்து பஸ்டாப்பிற்கு நடந்துவந்துகொண்டிருந்தார். அப்போது மேற்படி வாகனம் குப்பன் மீது இடித்து அவர் கீழே விழுந்துவிட்டார். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். பின்னர் சம்பவம் குறித்து போன் மூலம் இறந்தவரின் மகனுக்கு தகவல் சொன்னோம். பின்னர் அ.சா.1 சம்பவயிடம் வந்தபோது மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக சொல்லினோம், அவர் மருத்துவனைக்கு சென்றார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை இன்று ஆஜரிலிருக்கும் எதிரி தான் ஓட்டி வந்தார். அ.சா.1 யிடம் குப்பனை பற்றி விசாரித்தபோது அவர் மருத்துவமனைக்கு வரும்போது இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். பின்னர் ஒலக்கூர் காவல்

நிலையத்திற்கு புகார் கொடுக்க அ.சா.1 ம், அருளும் சென்றார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-3**

Name : அருள்
Father / Husband name : ஜெயராமன்
Village : கூச்சிக்கொளத்தூர்
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

Accused present. APP present.

__முதல் விசாரணை__

நான் தற்போது ஓட்டுநர் வேலை செய்கிறேன். இந்த வழக்கின் விபத்தில் இறந்துபோன குப்பன் எனது ஊரை சேர்ந்தவர். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி ஆரோக்கியராஜின் மகன் அருள், மரியஜோசப் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 29.06.2023 அன்று காலை சுமார் 06.00 மணியளவில் எங்கள் ஊரிலுள்ள ஜன்சனிலுள்ள டீக்கடையில் டீக்குடிக்க சென்றபோது குப்பன் என்பவர் திண்டிவனம் செல்வதற்காக நடந்து சென்றபோது TN 19 T 9965 YAMAHA இருச்சக்கர வாகனத்தில் எதிரி அதிவேகமாக வந்து குப்பன் என்பவரின் மீது மோதிவிட்டார். அதில் குப்பனுக்கு அடிப்பட்டது, நான் உடனே ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். சம்பவம் குறித்து அ.சா.1க்கு தகவல் சொல்லிவிட்டு ஆம்புலன்சின் மூலம் சென்றோம். மருத்துவமனையில் குப்பன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, உடலை போஸ்ட் மார்டம் செய்து உடலை கொடுத்தார்கள். விபத்து

ஏற்படுத்திய வாகனத்தை ஒலக்கூர் காவல் நிலையத்தில் ஆரோக்கியடென்னிஸ் எடுத்துச்சென்றார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.